# செம்மரம் வெட்டியதாக ஆந்திரத்தில் சுட்டுக் கொலை: டோலியில் தூக்கிச் செல்லப்பட்ட தொழிலாளி சடலம்

By DIN | Published on : 19th September 2018 05:50 AM | அ

+ அ அ- |

செம்மரம் வெட்ட வந்ததாகக் கூறி, ஆந்திரத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட தொழிலாளியின் சடலம், ஜமுனாமரத்தூரை அடுத்த கானமலை கிராமத்தின் மலை அடிவாரத்திலிருந்து அந்தக் கிராமத்துக்கு சுமார் 5 கி.மீ. தொலைவு டோலி கட்டி திங்கள்கிழமை இரவு தூக்கிச் செல்லப்பட்டது.

கானமலை கிராமத்தைச் சேர்ந்த சின்னய்யா மகன் காமராஜ் (58). இவர், ஆந்திர வனப் பகுதிக்கு செம்மரம் வெட்ட வந்ததாகக் கூறி, அந்த மாநிலத்தைச் சேர்ந்த செம்மரம் கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸாரால் கடந்த ஆகஸ்ட் 31-ஆம் தேதி இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து ஜமுனாமரத்தூர் போலீஸாருக்கும், காமராஜின் உறவினர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, காமராஜ் சாவில் சந்தேகம் இருப்பதாக அவரது உறவினர்கள் சார்பில், ஆந்திர மாநில உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டதால், கடந்த 18 நாள்களாக காளகஸ்தி அரசு மருத்துவமனையில் காமராஜின் சடலம் வைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து, அவரது சடலம் மறு உடல்கூறு பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் திங்கள்கிழமை ஒப்படைக்கப்பட்டது.

பின்னர், காமராஜின் சடலம் கானமலைக்கு திங்கள்கிழமை இரவு ஆந்திரத்தைச் சேர்ந்த அவசர ஊர்தி மூலம் கொண்டுவரப்பட்டது. அப்போது, கானமலை கிராமத்துக்குச் செல்ல போதுமான சாலை வசதி இல்லாததால், அந்தக் கிராமத்திலிருந்து 5 கி.மீ. தொலைவுக்கு முன்னதாக அவசர ஊர்தி நிறுத்தப்பட்டது.

தொர்ந்து, காமராஜின் சடலம் டோலி கட்டி 5 கி.மீ. தொலைவுக்கு

தூக்கிச் செல்லப்பட்டது. அப்போது, ஜமுனாமரத்தூர் வருவாய் துறையினர், போலீஸார் உடனிருந்தனர். இந்த நிலையில், கானமலை கிராமத்துக்குச் செல்லும் சாலைகளை சீரமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.